கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 28/2023**

2025-ம் ஆண்டு மே மாதம் 28-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகவல்லி | வயது | 29 |
| தந்தை பெயர் | முருகையன் | ஜாதி | |
| தொழில் | செவிலியர் | மதம் | |
| ஊர் | ஈரோடு | தாலுக்கா | |

( எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் குலமாணிக்கத்தில் வசித்து தற்போது ஈரோடு மாவட்டத்தில் உள்ள GRB NEW BORN CARE மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சாட்சி அஞ்சம்மாள் எனது தாயார் ஆவார். எனக்கு சாவித்திரி, ஜானகி, ஈஸ்வரி என்று மூன்று அக்காக்கள் இருக்கிறார்கள். நான் கடந்த 2018 ம் ஆண்டு முதல் 2021 ம் ஆண்டு வரை ஈரோடு மாவட்டத்தில் உள்ள எமர்ஜன்சி கேர் மருத்துவமனையில் பணிபுரிந்து வந்தேன். கடந்த 2018 ம் ஆண்டில் எதிரி பாலமுருகன் என்பவர் எனக்கு வாட்சப் மூலமாக அறிமுகமாகி பழக்கமானார். எதிரி பாலமுருகன் தான் ஓசூரில் உள்ள ஒரு நிறுவனத்தில் மெக்கானிக்காக வேலை செய்து வருவதாக கூறினார். முதலில் நாங்கள் நண்பர்களாக பழகினோம் பின்னர் அது காதலாக மாறியது. நாங்கள் இருவரும் காதலிப்பது எங்கள் இரு குடும்பத்தினருக்கும் தெரியும். நான் எனது காதலின் அடையாளமாக எதிரி பாலமுருகனுக்கு சுமார் 1.900 கிராம் ஒரு கல் வைத்த தங்க மோதிரத்தை அவருக்கு காதல் பரிசாக கொடுத்தேன். பின்னர் கடந்த ஜனவரி 2022 ம் ஆண்டு நானும் எதிரி பாலமுருகனும் வேளாங்கண்ணி கடற்கரைக்கு சென்றுவிட்டு அங்குள்ள் எம்.ஆர். பி லாட்சில் தங்கினோம். அப்போது எதிரி பாலமுருகன் தாம் கணவன் மனைவி போல் வாழலாம் என்று என்னை உடலுறவுக்கு அழைத்தார். நான் திருமணத்திற்கு பிறகு பார்த்து கொள்ளலாம் என்று கூறினேன் அதற்கு எதிரி பாலமுருகன் ஏன் என் மீது நம்பிக்கை இல்லையா நான் தான் உன்னை திருமணம் செய்து கொள்கிறேன் என்று கூறுகிறேனே என்று ஆசை வார்த்தை கூறி நம்ப வைத்து கட்டாயப்படுத்தி என்னிடம் உடலுறவு வைத்து கொண்டார். நான் ஈரோடில் வேலை பார்த்து கொண்டிருந்ததால் அங்கு நான் ரூம் எடுத்து தங்கி இருந்தேன். என்னுடன் திவ்யபிரியா மற்றும் சந்தியா ஆகியோர்கள் தங்கி இருந்தார்கள். அவர்கள்

இருவரும் இல்லாத நேரம் பார்த்து எதிரி பாலமுருகன் என்னை பார்க்க வருவார். அப்போது எதிரி பாலமுருகன் தாம் கணவன் மனைவி போல் வாழலாம் என்று என்னை உடலுறவுக்கு அழைத்தார். நான் திருமணத்திற்கு பிறகு பார்த்து கொள்ளலாம் என்று கூறினேன் அதற்கு எதிரி பாலமுருகன் ஏன் என் மீது நம்பிக்கை இல்லையா நான் தான் உன்னை திருமணம் செய்து கொள்கிறேன் என்று கூறுகிறேனே என்று ஆசை வார்த்தை கூறி நம்ப வைத்து கட்டாயப்படுத்தி என்னிடம் உடலுறவு வைத்து கொண்டார். நான் ஈரோட்டில் வேலை பார்த்து விட்டு எனது சொந்த ஊருக்கு வரும்போது என்னை அழைத்து செல்வதற்காக எதிரி பாலமுருகன் திருவாரூர் பேருந்து நிலையத்தில் காத்திருப்பார். என்னை எதிரி பாலமுருகன் இரு சக்கர வாகனத்தில் எனது வீட்டிற்கு அழைத்து செல்லும் போது அன்னுக்குடி என்ற ஊரில் உள்ள ஒரு வயல் போர் செட்டில் மேற்கூறிய அதே ஆசை வார்த்தைகளை என்னிடம் கூறி இரண்டு, மூன்று முறை என்னிடம் உடலுறவு வைத்து கொண்டார். மேற்படி எதிரி பாலமுருகன் என்பவருக்கு திருவாரூரில் உள்ள ரிலைன்ஸ் கடையில் நீல கலர் விவோ போன் ஒன்றை வாங்கி கொடுத்தேன். அதன் மதிப்பு சுமார் 10000 மேல் இருக்கும்.பின்னர் எதிரியும் எதிரியின் அம்மாவான கலா ஆகியோர்களுக்கு பணம் தேவைப்படும் போது என்னிடம் கேட்பார்கள் நான் ஜி பே மூலமாக அவர்களுக்கு பணம் அனுப்பி வைப்பேன். அதன் பிறகு தீடீரேன்று 15,20 நாட்கள் எனது அழைப்பை எதிரி ஏற்கவில்லை அவர் என்னிடம் பேசவும் இல்லை. என்ன காரணத்தால் பேசவில்லை என்று தெரியாத காரணத்தினால் நானும் எனது அம்மா அஞ்சம்மாளும் எதிரி பாலமுருகன் வீட்டிற்கு 2,3 முறை போன போது எதிரி வீட்டில் யாரும் இல்லை. பின்னர் ஒரு நாள் 31.08.2022 ம் தேதி மீண்டும் நானும் எனது அம்மாவும் எதிரி வீட்டிற்கு சென்ற போது எதிரியின் அம்மா எனது மகன் பாலமுருகனுக்கு சுதா என்ற பெண்ணுடன் திருமணம் ஆகிவிட்டது என்று திருமண சான்றினை எங்களிடம் கொடுத்தார். நான் மீண்டும் எதிரியின் அம்மாவிடம் சென்று நான் பாலமுருகனிடம் பேச வேண்டும் என்று கூறினேன் அதற்கு எதிரியின் அம்மா அவர்கள் தற்போது ஊரில் இல்லை என்று சொன்னார். பின்னர் கடந்த 12.09.2022 ம் தேதியன்று நான் காவல் நிலையம் சென்று எதிரி பாலமுருகன் மீது புகார் மனு கொடுத்தேன் அந்த புகார் மனுவுடன் நானும் எதிரி பாலமுருகனும் சேர்ந்து எடுத்துகொண்ட போட்டோ பிரிண்ட்அவுட் கொடுத்தேன். அத்துடன் சேர்த்து எதிரி பாலமுருகனின் அம்மா என்னிடம் கொடுத்த பாலமுருகனின் திருமண சான்றிதழை புகாருடன் வைத்து கொடுத்துள்ளேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது தான் அதில் உள்ள் கையொப்பம் என்னுடையது தான். (புகார் மனு அசா.ஆ.1 ஆகவும் , புகைப்படங்களின் பதிவிறக்கம் அசா.ஆ.2 வரிசையாகவும் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரால் 63 பிஎஸ் ஏ சான்றிதழ் இல்லை என ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.எதிரி மற்றும்

சுதா என்பவருக்கும் நடந்த திருமணத்தின் திருமண பதிவு சான்றிதழ் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பின்னர் போலீசார் என்னை அழைத்து கொண்டு அன்னுக்குடி கிராமத்தில் உள்ள போர்செட்டுக்கும், ஈரோட்டில் நான் தங்கி இருந்த ரூம்மிற்கும், திருவாரூர் ரிலையன்ஸ் கடைக்கு அழைத்து சென்றார்கள் அங்கு போலீசார் வரைப்படம் வரைந்தார்கள். அதே போல் வேளாங்கண்ணியில் உள்ள் எம் ஆர். டி லாட்சிக்கு சென்று அங்கு உள்ள மேலாளரிடம் வருகை பதிவேடு சம்பந்தமாக போலீசார் விசாரித்த போது அந்த வருகை பதிவேட்டினை திருச்சியில் உள்ள் போலீசார் கைப்பற்றி எடுத்து சென்று விட்டார்கள் என்று மேலாளர் கூறினார். பின்னர் அந்த லாட்சினுடைய வரைப்படத்தை போலீசார் வரைந்தார்கள். பின்னர் என்னை பெண் மருத்துவரிடம் கன்னி தன்மை தொடர்பாக பரிசோதனைக்கு உட்படுத்தினார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராத காரணத்தால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை**

இல்லை

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.05.28 17:57:00 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்,

திருவாரூர்.